# சட்டப்பேரவையில் 110-விதியின் கீழ் முதல்வர் ஆற்றிய உரை!.. முதல் பக்கத் தொடர்ச்சி

**மூன்றாவது அறிவிப்பு;** அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அவர்களுடைய குடும்பத்தினருடன் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில், ஏற்கெனவே இதுவரை வழங்கப்பட்டு வரும் பத்தாயிரம் ரூபாய் பண்டிகை கால முன்பணம் தற்போது இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள்.

**நான்காவது அறிவிப்பு;** அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகள் உயர்கல்வி பயில்வதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டிலிருந்து தொழிற்கல்வி பயில ஒரு இலட்சம் ரூபாயாகவும், கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் பயில ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கல்வி முன்பணம் உயர்வால் தங்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில விரும்பும் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறு வார்கள்.

**திருமண முன்பணம் உயர்வு!**

**ஐந்தாவது அறிவிப்பு;** அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், தமது பணிக்காலத்தில் தேவையின் அடிப்படையில் திருமண முன்பணமாக இதுவரை பெண் ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் மற்றும் ஆண்களுக்கு ஆறாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதனை பலமடங்கு உயர்த்தி அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பொதுவாக ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஆறாவது அறிவிப்பு;** தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வால் சுமார் நான்கு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் சுமார் 24 கோடி ரூபாயாக இருக்கும்.

> **முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் அரசு ஊழியர்களுக்கு அரணாக, அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக திராவிட மாடல் அரசு என்றென்றும் தொடரும் - தொடரும் - தொடரும் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

**ஏழாவது அறிவிப்பு;** ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**பழைய ஓய்வூதியத் திட்டம் செப்.30-க்குள் அறிக்கை!**

**எட்டாவது அறிவிப்பு;** அண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது. பல்வேறு அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில், இந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை செப்டம்பர் மாதம் 30ம் தேதிக்குள் சமர்ப்பித்திட அறிவுறுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மகப்பேறு கால விடுப்பு உயர்வு!**

**ஒன்பதாவது அறிவிப்பு;** திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறுக்காக ஒன்பது மாத காலமாக இருந்த விடுப்பை 01.07.2021 முதல் ஓராண்டு காலமாக உயர்த்தப்பட்டு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது உள்ள விதிகளின்படி மகப்பேறு விடுப்பு காலம் தகுதிகாண் பருவத்திற்கு (Probation period) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதன் காரணமாக அரசு பணிகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இளம் மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதிகாண் பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது. மகளிர் முன்னேற்றத்திற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்து வரும் இந்த அரசு, அரசுப் பணிகளில் பணியாற்றிவரும் மகளிரின் பணி உரிமைகளை பாதுகாக்கும் வகையில், இனிவரும் காலங்களில் அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதிகாண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் அரசு ஊழியர்களுக்கு அரணாக, அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசாக திராவிட மாடல் அரசு என்றென்றும் தொடரும் - தொடரும் - தொடரும் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டார்.

---

## அரசு ஊழியர் - ஆசிரியர்கள் நலன் கருதி

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்புகளுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்!

### அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, ஏப்.29-

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் அதன் நிறுவனத் தலைவர் சா.அருணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

அரசு நடைமுறைப்படுத்தி வருகிற நலத் திட்டங்கள், யாருக்கும் விட்டுப் போகாமல், அனைத்து மக்களையும் சென்றடைய பணியாற்றும் அரசு ஊழியர் ஒவ்வொருவரையும் இந்த தருணத்தில் தமிழ்நாடு அரசின் சார்பிலேயும், தனிப்பட்ட முறையிலேயும் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன் என்ற பேச்சு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறு உருவம் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின அவர்கள் என்பதை பறைச்சாற்றியுள்ளது

அரசு ஊழியர் ஆசிரியர்களின் நீண்டகால எதிர் கால வாழ்வாதாரா கொரிக்கையான புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய கொண்டுவருவது ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் உள்ளிட்ட ஒன்பது அறிவிப்புகளை சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் இன்று அறிவித்து எல்லோருக்குமான முதலமைச்சர் என்பதை நிலுபித்துக் காட்டியுள்ளார்

சென்ற அதிமுக ஆட்சியில் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நிதிநிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட அரசு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தை 01.04.2026 முதல், 15 நாட்கள் வரை பெற்றுக் கொள்ளலாம் அறிவித்திருந்த நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்பின் கோரிக்கையேற்று 01.10.2025 அன்று இருந்தே ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தை பெறலாம் என்று அறிவித்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஒப்பற்ற முதல்வர் என்பதையே காட்டுகிறது

இந்த அறிவிப்பின்படி, சுமார் 8 இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 3 ஆயிரத்து 561 கோடி ரூபாய் கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

அதோடு ஒன்றிய அரசு எப்போது எல்லாம் அகவிலைப்படியை உயர்த்தி வழங்குகிறதோ அப்போதெல்லாம் அதே தேதியிட்டு வழங்கப்படும் என்ற முதமைச்சர் கூற்றின்படி 01-01-2025 முதல் 2 விழுக்காடு அகவிலைப்படியினை ஒன்றிய அரசு அலுவலர்களுக்கு உயர்த்தி வழங்கிட அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மாநில அரசுப் பணியாளர்களுக்கும் 01—01-2025 முதல் அகவிலைப்படி 2 விழுக்காடு உயர்த்தி வழங்கி இந்த அகவிலைப்படி உயர்வால் சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இந்த உயர்வினை நடைமுறைப்படுத்திட ஆண்டு ஒன்றுக்கு 1252 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, சொல்வதை செய்ய கூடிய முதலமைச்சர் தான் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்



அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகள் உயர்கல்வி பயில்வதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கல்வி முன்பணம் இந்த ஆண்டிலிருந்து தொழிற்கல்வி பயில ஒரு இலட்சம் ரூபாயாகவும், கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக் பயில ஐம்பதாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்து இந்தக் கல்வி முன்பணம் உயர்வால் தங்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில விரும்பும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறுவார்கள் என்ற அறிவிப்பை அறிவித்து இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநில முதலமைச்சர்களுக்கான முதன்மை முதலமைச்சர் என்பதை உலகறிய செயதுள்ளார்

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால் சுமார் நான்கு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் சுமார் 24 கோடி ரூபாய் ஒதுக்கி ஓய்வூதியர் குடும்ப ஓய்வூதியர்களின் நலன் காப்பவர் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

ஒய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாக கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஒய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதலாக வழங்கி என்றும் உங்களுக்கான முதலமைச்சர் தான் தான் என்பதை அங்கீகரித்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நீண்டாள் எதிர்கால வாழ்வாதாரா கோரிக்கையான புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டு வர 2003-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சில் கோரிக்கைவைத்து போராடியபோது அரசு ஊழியர்களை கொடுமைக்கு ஆளாக்கி வஞ்சித்து சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது வழக்குகள் தொடர்ந்து சிறையில் அடைத்து துறை ரீதியான நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்து வாழ்க்கையே கேள்விக் குறி ஆக்கி இருண்ட காலமாக்கியது அது மட்டுமா 2018-ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த அதிமுக ஆட்சியில் இதே கோரிக்கைகளை முன்வைத்து காலவரையற்ற போராட்டத்தில் அரசு ஊழியர்கள் ஈடுப்பட்ட போது சுமார் 5500 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது வழக்கு தொடர்ந்து சிறையில் அடைத்து பணியிடை நீக்கம் செய்தார்கள். மேலும் பல ஆயிரக்கணக்கானோரை பணியிட மாற்றம் செய்து பந்தாடினார்கள்.

இந்த சூழ்நிலையில் அப்போதைய எதிர்கட்சித் தலைவராக இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போராட்டக்கலத்திற்கே நேரடியாக வந்து நீங்கள் உங்களை வருத்திக் கொண்டு போராட வேண்டாம் நான் ஆட்சிக்கு வந்தவுடன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றி தருகிறேன் என சூளுரையாற்றினார். அதோடு நின்று வடாமல் தேர்தல் அறிக்கையிலும் இடம்பெற செய்தார் துறை ரீதியான நடவடிக்கைகளை ரத்து செய்தார் வழக்குகளை திரும்ப பெற்றார் அதிமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட அகவிலைப்படியை ஆறு மாதங்கள் கழித்து வழங்கி பின்பு எப்போதெல்லாம் ஒன்றிய அரசு அகவிலைப்படிய்யை உயர்த்தி வழங்குகிறதோ அதே தேதியிட்டு வழங்குவேன் என அறிவித்து வழங்கிக் கொண்டு இருக்கிறார்.

முதலமைச்சர் அவர்கள் அதாவது சொல்வதை தான் செய்வோம் , செயவதை தான் சொல்வோம் என்ற தாரக மந்திரத்தை கையில் ஏந்தி செய்து வருகிறார் , அந்த வகையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான ஓய்வூதியத்திட்டம் குறித்து அண்மையில், பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று ஓய்வூதியத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்திட ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தனது அறிக்கை மற்றும் பரிந்துரையை ஒன்பது மாதங்களுக்குள் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டார்.

மேலும் திருமணமான அரசு பெண் பணியாளர்களுக்கு மகப்பேறுக்காக ஒன்பது மாத காலமாக இருந்த விடுப்பை 01.07.2021 முதல் ஓராண்டு காலமாக உயர்த்தப்பட்டு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது உள்ள விதிகளின்படி மகப்பேறு விடுப்பு காலம் தகுதிகாண் பருவத்திற்கு (Probation period) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

இதன் காரணமாக அரசு பணிகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இளம் மகளிர் மகப்பேறு விடுப்பு எடுத்தால், தகுதிகாண் பருவம் உரிய காலத்திற்குள் முடிக்க இயலாமல் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படுவதுடன், பணிமூப்பினை இழக்கும் நிலையும் ஏற்படுகிறது. மகளிர் முன்னேற்றத்திற்காக அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருதை நிருபிக்கும் வகையில் , அரசுப் பணிகளில் பணியாற்றிவரும் மகளிரின் பணி உரிமைகளை பாதுகாக்கும் வகையில், இனிவரும் காலங்களில் அரசு பெண் ஊழியர்களின் மகப்பேறு விடுப்புக் காலத்தினை அவர்களது தகுதி காண் பருவத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது என்ற அறிவிப்பு சொல்வதை செய்யக்கூடிய முதலமைச்சராகவும் , செய்வதை சொல்வ கூடிய முதமைச்சராகவும், சொல்லாததையும் செய்ய கூடிய முதலமைச்சர் என்பதை பறைசாற்றியுள்ளார்

ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக திகழ்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மறுவுருவம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சாந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருவூர்.சா.அருணன் தெரிவித்துள்ளார்.

---

# சட்டப் பேரவையில் எடப்பாடி பழனிச்சாமிக்கு முதல்வர் பதில்...

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

குறைந்திருக்கின்றன என்பது குறித்து நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதை நீங்கள் கேட்டிருந்தால் இந்தப் பேச்சே வந்திருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

********

பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அண்ணா பல்கலைக்கழக பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார். அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை புகாரைப் பொறுத்தமட்டில், உடனடியாக, இந்த ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து எல்லோருக்கும் தெரியும். குற்றவாளி அடையாளம் காணப்பட்டு, கைது செய்யப்பட்டு, குண்டர் சட்டத்திலும் அடைக்கப்பட்டு, ஏற்கெனவே நான் இந்த அவையிலே உறுதியளித்ததைப்போல, உயர் நீதிமன்ற மேற்பார்வையில் அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்துவிட்டது. இந்தப் புகாரின்மீது காவல் துறை விரைவாக நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை மாண்பமை உயர் நீதிமன்றமே பாராட்டியிருக்கிறது. எந்த பாலியல் புகாராக இருந்தாலும், 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுத்து, குறிப்பிட்ட காலத்திற்குள் குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்து வருகிறது இந்த அரசு. 'Sir' என்றெல்லாம் கதை விட்டீர்கள். ஆனால், அந்தக் கதை எப்படிக் கற்பனையானது என்பது குறித்து உயர் நீதிமன்றம் அமைத்துள்ள சிறப்பு புலனாய்வுக் குழுவே குற்றப் பத்திரிகையில் தெளிவுப்படுத்தி இருக்கிறது. அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கொடுக்க முடியாது. அதுமட்டுமின்றி, உயர் நீதிமன்றமே பாராட்டியுள்ள நடவடிக்கையை இன்னும் கொச்சைப்படுத்திக் கொண்டிருந்தால், கடந்த காலத்தில் நடைபெற்ற பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் எப்படிக் குற்றவாளிகள் காப்பாற்றப்பட்டார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. என்பதற்காக புகாரின்மீது நடவடிக்கை எடுக்க எப்படியெல்லாம் தாமதம் செய்தீர்கள் என்பதை மீண்டும் நான் பட்டியலிட வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள்!**

அதேபோல, பெண்களுக்கு எதிரான குற்றங்களைப் பற்றி இங்கே சொன்னீர்கள். பெண்களுக்கு எதிராக நடைபெறக்கூடிய குற்றங்கள் குறித்து நான் சொல்ல வேண்டுமென்றால், இந்த அரசைப் பொறுத்தமட்டில், எந்தக் குற்றம் நடந்தாலும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்மீது தயவு, தாட்சண்யமின்றி கடுமையாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். எனவே, இதுகுறித்த சில தகவல்களையும், புள்ளிவிவரங்களையும் இந்த அவையிலே நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களின் தேசிய சராசரி 66.4 விழுக்காடு என்றால் தமிழ்நாட்டில் இந்தக் குற்றங்கள் 24 விழுக்காடுதான். பெண்களுக்கான எதிரான குற்றங்கள் குறைவாக இருக்கின்ற மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்று. பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளில் தேசிய சராசரி 4.7 விழுக்காடு என்றால் தமிழ்நாடுதான் ஒரு இலட்சம் பேருக்கு, 1.1 என்ற அளவில் நாட்டிலே குறைவான குற்றம் நடக்கிற மாநிலமாக இருக்கிறது. பெண்களுக்கு எதிராக வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வதில் தேசிய சராசரி 75.5 விழுக்காடு. ஆனால் தமிழ்நாட்டில் இந்தச் சராசரி 90.6 விழுக்காடு. 2024ல் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் நாட்டிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான நகரங்களில் சென்னை இரண்டாவது இடம் பிடித்திருக்கிறது. இது எல்லாவற்றையும்விட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறித்து, தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சியினுடைய பொள்ளாச்சி பாலியல் சம்பவம் பெண்கள் பாதுகாப்பில் ஒரு கரும்புள்ளி. ஆனால் தி.மு.க. ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து தீவிர நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் பணிக்குச் செல்லக்கூடிய பெண்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் உயர்ந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

********

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இங்கே பேசுகிறபோது, சென்னை முட்டுக்காடு பாலம் அருகே காரில் சென்ற பெண்களை மறித்தது பற்றிக் குறிப்பிட்டார். கடந்த 25-1-2025 அன்று அதிகாலை கானத்தூரைச் சேர்ந்த பெண், உறவினரோடு காரில் சென்று கொண்டிருந்தபோது, தி.மு.க. கொடி கட்டிய ஒரு கார் உட்பட, இரு கார்களில் வந்த சுமார் 7 நபர்கள், அவரின் காரை வழிமறித்தும், பின்தொடர்ந்தும் சென்று அவர்களின் கார், தங்களின் காரின்மீது மோதிவிட்டு, நிற்காமல் சென்று விட்டதாக சென்றுவிட்டதாக கூறி, வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக பீர்க்கன்கரணை சேர்ந்த சந்தோஷ், இரும்புலியூரை சேர்ந்த சந்துரு மற்றும் 3 பேர், 1-2-2025 மற்றும் 2-2-2025 ஆகிய தேதிகளில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அவர்கள் பயன்படுத்திய இரு கார்களும் கைப்பற்றப்பட்டு, நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. கைது செய்யப்பட்ட நபர்கள் தி.மு.க.வின் உறுப்பினர் இல்லை என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

**விழிப்புணர்வு!**

அதேபோல விழிப்புணர்வு அதிகம் செய்வதால்தான் பள்ளிக்கூடம், கல்லூரிகளில் பரப்புரை அதிகம் செய்யப்படுகிறது. அதனால்தான் தைரியமாக நம்மிடம் complaint கொடுக்கிறார்கள். முந்தைய ஆட்சியில் அந்த complaint கொடுப்பதற்கு அச்சப்பட்டார்கள். இப்போது தெம்போடு, தைரியத்தோடு வந்து complaint கொடுக்கிறார்கள் இதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

********

பேரவைத் தலைவர் அவர்களே, கனிம வளங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கனிம சுரங்க விதிகளுக்குட்பட்டு, நமது மாநிலத்தில் செயல்படும் குவாரிகளிலிருந்து, முறையான நடைச் சீட்டுப் பெற்று அண்டை மாநிலங்களுக்கு கனிமங்கள் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. இந்த விதிகளின்படி செயல்படாத குவாரிகள்மீதும், முறையான நடைச் சீட்டு பெறாமல் கனிம வளங்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள்மீதும், தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆட்சிக் காலத்தில்தான், முன்பு எப்போதும் விதிக்கப்படாத அளவில், விதிமீறல்களில் ஈடுபட்ட குவாரி கள் மீது அதிக அபராதத் தொகை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். மேலும், முறையான நடைச் சீட்டு இல்லாத வாகனங்கள் சிறைபிடிக்கப்பட்டு, கடந்த 4 ஆண்டுகளின் முறையே 2021 ஆம் ஆண்டு 7,984 வழக்குகளும், 2022 ஆம் ஆண்டு 5,018 வழக்குகளும், 2023 ஆம் ஆண்டு 3,672 வழக்குகளும், 2024 ஆம் ஆண்டு 5,090 வழக்குகளும், 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 882 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் விதிகளை மீறி, கூடுதலாக கனிமங்களை ஏற்றிச் செல்லும் லாரிகளால் சாலைகள் பாதிப்படையாமல் இருக்கவும், தொடர்ந்து எல்லாப் பகுதிகளிலும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, விதிகளுக்குட்பட்டு கனிமங்கள் அண்டை மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதை மட்டுமே இந்த அரசு அனுமதிக்கும். விதிகளுக்கு எதிராக செயல்படுபவர்கள்மீது கடும் நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

********

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கைப் பொறுத்தமட்டில், 48 மணிநேரத்தில் இதிலே ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இது CBCIDக்கு மாற்றப்பட்டுள்ள வழக்கு. புலன் விசாரணையில் இருக்கிறது. இதுகுறித்துப் பேசுவது முறையல்ல. எனவே, அவ்வாறு பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

********

பேரவைத் தலைவர் அவர்களே, யாரும் பயப்படவில்லை. எதற்கும் நாங்கள் அச்சப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) Norms. (குறுக்கீடு) இது அவைக் குறிப்பில் எப்படி இடம்பெற முடியும்? வழக்கு நிலுவையில் இருக்கும்போது, எப்படி record செய்வீர்கள்? (குறுக்கீடு) அதைப் பேசவே கூடாது. நீங்கள் இவ்வாறு எத்தனையோ முறை சொல்லியிருக்கிறீர்கள். இதே அவையில் நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது, நீதிமன்றத்தில் உள்ள பொருள் குறித்துப் பேசக்கூடாது என்று நீங்களே பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன். நீங்கள் பேசியது தவறு என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அதனால் யாரும் பயந்து கொண்டோ, அச்சப்பட்டுக் கொண்டோ அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு)

********

பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல நாங்கள் இதனை அச்சத்தின் காரணமாகவோ, பயத்தின் காரணமாகவோ அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்று சொலவில்லை. வேண்டுமனால் இப்போது சொல்கிறேன். நாங்கள் தைரியமாக இந்த வழக்கைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதையும் பதிவு செய்யுங்கள். நான் சொன்ன பதிலையும் பதிவு செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் கூறினார்.

---

# பெண் காவலர்களுக்கு - கழக அரசில் பல்வேறு சலுகைகள்!

### சட்டப்பேரவையில் - இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினருக்கு - முதல்வர் பதில்!

**சென்னை, ஏப்.29-**

**சட்டப்பேரவையில் நேற்று, இந்திய கமயூனிஸ்ட் உறுப்பினர் கே.மாரிமுத்து விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறுக்கிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெண் காவலர்களுக்கு கழக அரசில் அளிக்கப்படும் பல்வேறு சலுகைகளை எடுத்துரைத்தார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது :

உறுப்பினர் கே.மாரிமுத்து அவர்கள் உரையாற்றுகிறபோது பெண் காவலர்களுக்கான திட்டங்களைப் பற்றிக் கேட்டார். பெண் காவலர்களுக்கு இந்த ஆட்சியிலே பல்வேறு சலுகைகள், பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு சிலவற்றை மட்டும் நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

கணவரும் காவல் துறையில் பணியாற்றினால், அவருடைய கணவரும் காவல் துறையில் பணியாற்றினால், அந்தப் பகுதியில் பணியிட மாறுதல் வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மகப்பேறு விடுப்பு முடித்து பணிக்குச் சேரும்போது, மூன்றாண்டுகளுக்கு விரும்பிய ஊரில் பணியிட மாறுதல் வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கருவுற்றிருக்கும் காலத்தில் சீருடை அணிவதிலிருந்து விலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பெண் காவலர்களின் குழந்தைகளை கவனித்துக்கொள்ள வசதியும் செய்யப்பட்டுள்ளது.

பொது இடங்களில் பணியாற்றும் பெண் காவலர்களுக்கு நடமாடும் கழிவறை வசதி என்ற அந்த நிலையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்படிப் பல்வேறு வகைகளிலும் பெண் காவலர்களுடைய நலனில் அக்கறை கொண்டுதான் செயல்பட்டு வருகிறோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.